பக்கங்கள் 16+6

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## இரத்தக் காயங்களுடன் பெண்ணின் சடலம் மீட்பு

இரத்தக் காயங்களுடன் பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு, கடுவலையில் வீட்டில் இருந்தே சடலம் மீட்கப்பட்டுள்ளது. 04▶

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 பங்குனி 16 வெள்ளிக்கிழமை 29.03.2024 அதிர்வு 242



# தமிழரின் வாக்குகள் ரணிலுக்கே!

## அடித்துக் கூறுகின்றார் ரவி

“எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் வாக்குகள் ரணில் விக்கிரமசிங்கவுக்கே கிடைக்கும். 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் விட்ட வரலாற்றுத் தவறை தமிழ் மக்கள் மீண்டும் ஒரு தடவை விடமாட்டார்கள்.”

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

இலங்கை அரசியலில் சூடுபிடித்துள்ள ஜனாதிபதித் தேர்தல் விவகாரம் தொடர்பில் ரவி கருணாநாயக்கவிடம் வெளிநாட்டு ஊடகம் ஒன்று வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 04▶



# ரணில் போட்டியிடமாட்டாராம்

## மீண்டும் கூறுகின்றார் கம்மன்பில



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடமாட்டார் என்பது உறுதி என்று பிவிருது ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

“படுதோல்வியைத் தவிர்ப்பதற்காகவே முன்கூட்டியே நாடாளுமன்றத் தேர்தலை நடத்துமாறு பஸில் ராஜபக்ஷ கோருகின்றார். ஆனால், எந்தத் தேர்தல் நடந்தாலும் மொட்டுக் கட்சியால் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற முடியாது.” - என்றும் உதய கம்மன்பில கூறினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

“மொட்டுக் கட்சிக்கு ஆதரவு உள்ளது, மக்கள் உள்ளனர் என்றெல்லாம் அக்கட்சியினர் மாயையை உருவாக்கி வருகின்றனர். ஜனாதிபதித் தேர்தலில் படுதோல்வி ஏற்படும் என்பது பஸிலுக்குத் தெரியும். எனவே, ஜனாதிபதித் தேர்தல் முதலில் நடத்தப்பட்டால் நாடாளுமன்றத் தேர்தலுக்கு வேலை செய்வதற்கு எவரும் இருக்கமாட்டார்கள். அதனால் மொட்டுத் தரப்பினருக்கு மேலும் பின்னடைவு ஏற்படும். இதனாலேயே நாடாளுமன்றத்தில் சில ஆசனங்களைத் தக்கவைத்துக்கொள்ள முன்கூட்டியே 04▶



# இராணுவத்தின் நிர்வாகத்தின் கீழ் ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை

## புனரமைப்புப் பணிகள் மும்முரம்

(ந.லோகதயாளன்)

ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை இராணுவ சமூக சேவையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. அத்துடன், தொழிற்சாலையைப் புனரமைக்கும் பணிகளில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர் என்று அறியவருகின்றது.



நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்டத்துக்குச் சென்ற இராணுவத் தளபதி லெப். ஜெனரல் விக்கும் லியனகே பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றார். இதன்போது, ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலைக்கும் சென்று அங்கு முன்னெடுக்கப்படும் புனரமைப்பு பணிகளையும் பார்வையிட்டார்.

இந்தத் தொழிற்சாலையில் கடந்த பெப்ரவரி 15ஆம் திகதி முதல் புனரமைப்பு பணிகள் இடம்பெற்று வருகின்றன என்றும் அறியவருகின்றது.

கூழாமுறிப்பில் அமைந்துள்ள இந்த ஓட்டுத் தொழிற்சாலை உள்நாட்டுப் போர் காரணமாக கடந்த 1983ஆம் ஆண்டு முதல் செயலிழந்து காணப்பட்டது. எனினும், 2009ஆம் ஆண்டின் பின்னர் இந்தத் தொழிற்சாலையை மீண்டும் இயக்க மாறிமாறி வந்த அரசுகள் உறுதியளித்தன. ஆனால், அவை எதுவும் நடக்கவில்லை.

இந்தநிலையிலேயே, இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனம் தொழிற்சாலையை இராணுவ சமூக சேவையின் கீழ் வழங்கியுள்ளது. இதைத் தொடர்ந்தே தொழிற்சாலையை புனரமைக்கும் பணிகளில் இராணுவம் ஈடுபட்டுள்ளது.

"நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கவும் உள்நாட்டு மக்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் அந்தப் பகுதி மக்களின் நலனை மேம்படுத்தவும் இந்த தொழிற்சாலை புதுப்பிக்கப்படுகிறது." - என்று இராணுவம் தெரிவித்துள்ளது.

# எச்.ஐ.வி. தொற்றாளரின் எண்ணிக்கை அதிகரிப்பு

கடந்த வருடத்தை விட எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை இந்த வருடம் அதிகரித்துள்ளது என்று தேசிய எயிட்ஸ் தடுப்பு திட்டத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஜானகி விதானபத்திரன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், 20 முதல் 30 வயதுக்கு இடைப்பட்டோரே எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாகின்றமை அதிகரித்துள்ளது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.






# காதல் விவகாரத்தால் இளைஞர் ஒருவர் வெட்டிக்கொலை!

காதல் விவகாரத்தால் ஏற்பட்ட மோதலில் இளைஞர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பயங்கர சம்பவம் லுனுகம்வெஹர, பஞ்சி அப்புஜந்துர பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் இன்று தெரிவித்துள்ளனர்.

31 வயதுடைய நபரே வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் லுனுகம்வெஹர வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.



## மருதமுனை இரட்டைப் படுகொலை: தந்தைக்கு 14 நாள்கள் மறியல்!

(பாறுக் ஷிஹான்)

மருதமுனை இரட்டை படுகொலை சந்தேக நபரான தந்தையை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறும் அது தொடர்பான வழக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி வரை மறு விசாரணைக்காக ஒத்தி வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாக்கியதுல் சாலியா வீதியில் உள்ள வீட்டில் படுகொலை செய்யப்பட்ட இரு பிள்ளைகளின் வழக்கு தொடர்பில் நேற்று (28) கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம். சம்சுதீன் முன்னிலையில் பெரிய நீலாவணை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட அந்தப் பிள்ளைகளின் தந்தை மன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் பொலிஸார் மற்றும் பிரதிவாதியின் சட்டத்தரணி ஆகியோரின் விண்ணப்பங்கள் ஆராயப்பட்டு 63 வயதுடைய குறித்த சம்பவத்தில் மரணமடைந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான முஹம்மது மிர்சா முகமது கலீல் என்பவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.



## முட்டை விலையில் மாற்றம் இல்லை

எதிர்வரும் டிசம்பர் மாதம் வரை முட்டையின் விலை அதிகரிக்கப்படமாட்டாது என்று அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் செயலாளர் ரத்னஸ்ரீ அழககோன் தெரிவித்தார்.

அத்துடன் நாட்டில் மாதமொன்றுக்கு 6 இலட்சம் கோழி முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"முட்டையின் விலை 35 ரூபாவாகக் குறைந்தால் சிறு மற்றும் நடுத்தர முட்டை உற்பத்தியாளர்கள் கடும் சிரமங்களுக்கு முகங்கொடுக்க நேரிடும்.

கடந்த 2023ஆம் ஆண்டு, அரசு அதிகமான கோழிகளை இறக்குமதி செய்துள்ளது.

இதன் விளைவாக, 2025ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் முட்டைகளினதும் கோழிக் குஞ்சுகளினதும் எண்ணிக்கை நாட்டில் அதிகரிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது."
– என்றார்.

# ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைத்தால் நாடெங்கும் மக்கள் போராட்டம் வெடிக்கும்

## மஹிந்த தேசப்பரிய எச்சரிக்கை



நாடெங்கும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு மக்கள் போராட்டம் வெடிக்கும் என்பதால் ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்குரிய முயற்சிகள் இடம்பெறமாட்டாது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கவே முடியாது. அதனைச் செய்வதாயின் அரசமைப்பு மறுசீரமைப்பு அவசியம். அதற்கு உயர்நீதிமன்றத்தின் அனுமதி அவசியம். நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் தேவை. சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

இதற்கிடையில் அவ்வாறான முயற்சி எடுக்கப்பட்டால் மக்கள் வன்முறையற்ற அமைதிப் போராட்டத்தில் இறங்குவார்கள். நானும் முதலில் சட்டத்தை நாடுவேன். அதன்பின்னர் போராட்டம் செய்வேன். எனவே, அப்படியான முயற்சி இடம்பெறாது என்றே தோன்றுகின்றது.

அதேவேளை, நான் அரசியல் செய்வேன். ஆனால், தேர்தல் அரசியலில் ஈடுபடமாட்டேன். ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் அல்ல பிரதேச சபை தேர்தலில்கூட போட்டியிடமாட்டேன்." - என்றார்.

# ராஜபக்ஷக்களுடன் இனி அரசியல் பயணம் இல்லை

**உதய கம்மன்பில திட்டவட்டம்**

ராஜபக்ஷக்களுடன் இனி அரசியல் பயணம் கிடையாது என்று பிவிருது ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

"கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கி கசப்பான பாடத்தை கற்றுக் கொண்டுள்ளோம். எனவே, இனியும் தனிநபர்களை மையப்படுத்தியதாக எமது அரசியல் பயணம் அமையாது." - என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் எமது கூட்டணி அறிவிக்கப்படும். 2015 இல் மஹிந்த சூறாவளி எனும் நடவடிக்கையை ஆரம்பித்தோம். அது தனிநபரை மையப்படுத்திய பயணம். இனியும் அவ்வாறு செயற்படத் தயாரில்லை.

தனிநபர்களை மையப்படுத்திய அரசியல் பயணத்தால் இரு கசப்பான பாடங்கள் கற்பிக்கப்பட்டுள்ளன. எமது எதிரணி மைத்திரிபால சிறிசேனவை ஆட்சிக்குக் கொண்டு வந்து கசப்பான பாடத்தையும், கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சிக்குக் கொண்டு வந்து கசப்பான பாடத்தையும் கற்றுக்கொண்டுள்ளோம்.

தர்மத்தின் வழியில் வேலைத்திட்டம் மற்றும் கொள்கைகளையே நாம் தலைமைத்துவமாகக் கருதிச் செயற்படுவோம். ராஜபக்ஷக்களுடன் இனி அரசியல் பயணம் கிடையாது." - என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**ரணில்...**

நாடாளுமன்றத் தேர்தல் கோரப்பட்டுள்ளது.

இரண்டாவது அரச ஊடகம் மற்றும் அரச அதிகாரிகள், பொலிஸார் ஊடாக ஏதேனும் ஒத்துழைப்பைப் பெறலாம் என பஸில் கருதுகின்றார். ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டால் இந்த ஒத்துழைப்பும் கிடைக்கப்பெற மாட்டாது.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடமாட்டார் என்பது உறுதி." - என்றார்.

**தமிழரின் வாக்குகள்...**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதித் தேர்தல் இவ்வருடம் நடைபெற்றே தீரும். தேர்தலை ஒத்திவைக்கும் எண்ணம் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இல்லை. ஏனெனில், நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராகப் போட்டியிடவுள்ள ரணில் தான் வெற்றியடையப் போகின்றார். எனவே, அவருக்குத் தேர்தலை ஒத்திவைக்க வேண்டிய தேவையில்லை. அவரின் வெற்றி சரித்திர வெற்றியாகப் பதியப்படும்.

சிங்கள மக்களுக்கு மாத்திரமில்லாமல் தமிழ், முஸ்லிம் மக்களின் நம்பிக்கை மிகுந்த தலைவராக ரணில் விளங்குகின்றார்." - என்றார்.

**இரத்தக் காயங்களுடன்...**

கடுவலை நகரில் பணிபுரிந்து வரும் அஜந்தா என்ற 51 வயதுடைய 2 பிள்ளைகளின் தாயாரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவரது கணவர், மகள் மற்றும் மகன் ஆகியோர் காலையில் வேலைக்குச் சென்ற நிலையில், மேற்படி பெண் வீட்டில் தனியாக இருந்துள்ளார்.

இந்நிலையில், சடலமாக மீட்கப்பட்ட பெண்ணின் தலையின் பின்புறத்தில் பலத்த காயம் மற்றும் அவரது முகத்தில் கீறல்கள் உள்ளன என்றும், அவர் அணிந்திருந்த தங்க ஆபரணங்களும் காணாமல்போயுள்ளன என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேற்படி பெண் வழமையாக முற்பகல் 11 மணியளவில் வேலைக்குச் செல்பவர் என்றும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

வீட்டில் திருடுவதற்காக வந்த யாரேனும் தாக்கியதால், அந்தப் பெண் உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

# கல்முனை உப பிரதேச செயலக விவகாரம்; 5ஆவது நாளாக போராட்டம் முன்னெடுப்பு!





(நூருல் ஹுதா உமர், வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தின் மீதான தொடர்ச்சியாக நிர்வாக அடக்கு முறைகளுக்கு எதிராக அங்குள்ள பொதுமக்கள் ஐந்தாவது நாளாக இன்று (29) கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

அந்தப் பிரதேச செயலகத்தின் முன்பு கடந்த திங்கட்கிழமை (25) பொது மக்கள் பல்வேறு சுலோகங்களை உள்ளடக்கிய பதாகைகள் தாங்கிய வண்ணம் அமைதி வழியில் ஒன்று கூடி போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

அதன் தொடர்ச்சியாக 5 ஆவது நாளான இன்றும் பல்வேறு சுலோகங்களை முன்வைத்து போராட்டத்தை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். இன்றைய 5 ஆம் நாள் போராட்டத்தில் சேனைக்குடியிருப்பு விதாதா தையல் பயிற்சி நிலைய மாணவிகள் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்துக்கு எதிராக இடம்பெற்று வரும் சூழ்ச்சிகளையும் நிர்வாக அடக்கு முறைகளைக் கண்டித்தும் திட்டமிடப்பட்டு பிரதேச செயலக உரிமைகளை ஒடுக்கும் நிர்வாக அடக்கு முறைகளை இனியும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது எனவும் அரசு இன்னும் வாக்குறுதிகளை வழங்கி காலத்தை இழுத்தடிக்காது உடன் தீர்வை தரும் வரை தனது அமைதிப் போராட்டம் தொடரும் என்றும் மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை இன்று வெள்ளிக்கிழமை மாலை மெழுகுவர்த்தி ஏற்றி போராட்டத்தை நடத்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அனைவரையும் இன்று மாலை 6 மணிக்குப் பிரதேச செயலகத்துக்கு முன்பாக திரண்டு ஒற்றுமையை வெளிப்படுத்தி அமைதியான முறையில் எமது போராட்டத்தை முன்னெடுக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# கடினப்பந்து பயிற்சிக் கூடாரம் கிழக்கின் கேடயத்தால் அமைப்பு

## அடிக்கல் வைத்து ஆரம்பித்து வைத்தார் எஸ்.எம். சபீஸ்





(நூருல் ஹுதா உமர், அபு அலா)

பாலமுனையில் கடினபந்து கிரிக்கெட் பயிற்சிக் கூடாரத்துக்கான அடிக்கல் நட்டு வைக்கப்பட்டுள்ளது. அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும், கிழக்கின் கேடயம் அமைப்பின் தலைவருமான எஸ்.எம் சபீஸ் இதனை ஆரம்பித்து வைத்தார்.

அடிக்கல்லை நட்டு வைத்து இளைஞர்கள் மத்தியில் உரையாற்றிய சபீஸ், எமது இளைஞர்கள் எதிர்காலத்தில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியான போட்டிகளில் வாய்ப்புக்களை பெற வேண்டுமானால் எல்லா ஊர்களிலும் கடினபந்து கிரிக்கெட் விளையாடுவதற்கான தளங்களை உருவாக்க வேண்டும். பாடசாலைகள் மட்டத்திலான போட்டிகளை நடத்திப் புதிய திறமையான வீரர்களை எமது பகுதிகளிலும் உருவாக்க வழிவகை செய்ய வேண்டும். அதற்கான முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம்.

இன்னும் சில வருடங்களிலாவது எமது பிராந்திய இளைஞர்கள் தேசிய அணியில் இடம்பிடிக்கும் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கான சிறு முயற்சி மாத்திரமே இது எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் உலமாக்கள், கிழக்கின் கேடயம் பொருளாளர் ஏ.எல்.ருஸ்தி அஹ்மத், கிழக்கின் கேடயத்தின் இணைப்பாளர் சட்டக் கல்லூரி மாணவன் முஹம்மட் அசாம், ஏ.கே. அமீர், அட்டாளைச்சேனை பிரதேச சபை முன்னாள் உப தவிசாளரும், கிழக்கின் கேடயத்தின் ஆலோசகருமான சட்டமானி எஸ்.எம்.எம். ஹனீபா, செயற்குழு உறுப்பினர் ஏ.எல்.எம்.அர்சாத், அதிபர் எம்.எஸ்.எம். நியாஸ், ஏ.எல். றமீஸ், இளைஞர் அமைப்பின் தலைவர் முஹம்மது சீத், மற்றும் அரசியல் பிரமுகர்கள், அரச அதிகாரிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இரு தேர்தல்களும் ஒன்றாக?

இது தேர்தல் ஆண்டு என்பது ஓரளவுக்கு உறுதியானது.

இந்தச் சமயத்தில் இருதலைக் கொள்ளி எறும்பு நிலையில் தடுமாறுகின்றது ஆளும் கட்சியான பொதுஜனப் பெரமுன.

கட்சிக்குள் மட்டுமன்றி கட்சியின் நிலைமையும் கூட அதுதான்.

கட்சிக்குள் ராஜபக்ஷ குடும்பத்தினர் இடையே கூட துருவமயப்பட்ட நிலைப்பாடுதான். நாமல் - பஸில் இருவரும் சரி, ஒன்றித்த நிலைப்பாட்டில் இல்லை என்பதும் கண்கூடு. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்து கொண்டு, ஜனாதிபதி ரணில் பக்கம் சார்ந்து இருப்போரை எப்படி கட்சிக்குள் கொண்டிழுப்பது என்று தெரியாத இக்கட்டும் கட்சிக்குள் உள்ளது.

அதேசமயம் தேர்தல் ஆண்டான இந்த வருடத்தில் தேர்தல்கள் தொடர்பாக என்ன அணுகுமுறையை மேற்கொள்வது என்ற விடயத்திலும் இருதலைக் கொள்ளி எறும்பு நிலைதான்.

பொதுத் தேர்தலை முதலில் நடத்தி, கட்சியின் நாடாளுமன்ற வலிமையை ஓரளவுக்கேனும் தக்க வைத்துக் கொள்ளலாம் என்று பார்த்தால், அதற்கு அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மசிந்து கொடுப்பவராக இல்லை.

பொதுத்தேர்தலை முதலில் நடத்தி, அதன் பின்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்தினால், சாதாரணமாக ஜனாதிபதித் தேர்தலில் வரக்கூடிய வாக்குகள் கூட தனக்குக் கிட்டாமல் வெற்றி வாய்ப்பை அது அடித்துச் சென்று விடும் என்று அஞ்சுகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அது சரியான நிலைப்பாடும் கூட.

பொதுத் தேர்தலை முற்கூட்டியே நடத்த இயலாமைக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் முரண்டு பிடிக்க முடியாத இக்கட்டும் மொட்டு கட்சிக்கு. ரணிலுடன் முரண்டு பிடித்தால், வரக்கூடிய ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு காத்திரமான ஒரு மாற்று வேட்பாளர் கூட மொட்டுக் கட்சி பக்கத்தில் இல்லை. ரணிலுடன் முரண்படுவது அத்தகைய அவல நிலைமையை ஏற்படுத்தி விடும் என்ற யதார்த்தம் மொட்டுத் தலைவர்களுக்கு தெரியாமல் இல்லை.

எது, எப்படி என்றாலும் ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்த அனுமதித்து, அதன் பின்னர் நாடாளுமன்றத் தேர்தல் என்றால், அந்தப் பொதுத் தேர்தலில் வெற்றியை எதிர்பார்த்துக் காத்திருப்பது 'இலவு காத்த கிளியின் கதையாகிவிடும்' என்பது பஸில் ராஜபக்ஷ உள்ளிட்ட மொட்டுக் கட்சித் தலைவர்களுக்கு நன்கு தெரியும்; புரியும்.

முதலில் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு ரணிலை இணங்க வைக்க முடியவில்லை. அதற்காக ரணிலைப் பகைத்து அரசியல் உறவை முறிக்கவும் முடியாத நிலைமை என்ற இருதலைக் கொள்ளி எறும்பின் நெருக்கடியில் மொட்டு அல்லாடுவது வெளிப்படையான உண்மை.

இந்த நெருக்கடியைத் தாண்டுவதற்கான மந்திராலோசனையில் மொட்டுக் கட்சியின் சாணக்கியர் பஸில் மும்முரமாக இருக்கின்றார் என்று தெரிகிறது.

அறகலய போராட்டம் ஏற்படுத்திய நிர்பந்தத்தினால், அப்போதைய நெருக்கடி காலச் சூழலில் மொட்டுக் கட்சியினதும், ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அப்போது தோல்வியில் துவண்டு கிடந்த ஐக்கிய தேசியக் கட்சியினதும் அரசியல் இணைவு - கூட்டுச் செயற்பாடு - தவிர்க்க முடியாத கட்டாயமாக மலர்ந்தது.

அந்தத் தேனிலவு, காலத்தின் கட்டாயமாக, எதிர்பாக்கப்பட்டதையும் மீறி தொடர்ந்து நீண்ட காலம் தாக்குப் பிடிக்கிறது.

அதைத் துறக்காமல் பேணியபடிதான் இப்போதைய தேர்தல் நெருக்கடியை எதிர்கொண்டு தாண்ட வேண்டும் என்ற களயதார்த்தம் நன்கு புரிவதால், அந்த வரையறைக்குள் புதிய எத்தனங்கள் குறித்து மொட்டுக்கட்சியின் சாணக்கியர் பஸில் ராஜபக்ஷ தீவிரமாக ஆராய்கிறார் என்று கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தலை நடத்த ரணில் விக்கிரமசிங்க இணங்குகின்றார் இல்லை. அதற்காக ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் பொதுத் தேர்தலை நடத்துவதும் தமக்குப் பின்னடைவைத் தரும் என்பதால் மாற்று ஏற்பாடாக, ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவை மொட்டுக் கட்சியும் சேர்ந்து ஆதரிக்கும் அதே சமயம், ஜனாதிபதித் தேர்தல் - பொதுத் தேர்தல் இரண்டையும் ஒன்றாக ஒரே நாளில் வாக்களிப்பு என்ற அடிப்படையில் நடத்துவதற்கு வலியுறுத்தினால் என்ன என்று யோசனை குறித்து பஸில் தரப்பு சிந்திப்பதாகக் கூறப்படுகிறது. அது தொடர்பான கருத்துப் பரிமாற்றங்கள் அடுத்து வரும் நாள்களில் கட்டவிழும் என்று எதிர்பார்க்கலாம்.



# கோறளைப்பற்று பிரதேசத்தில் போதைத் தடுப்பு குழுக் கூட்டம்!

(பழுவூரான்)

கோறளைப்பற்று பிரதேச செயலக 2024 ஆம் ஆண்டுக்கான முதல் காலாண்டுக்கான போதைப் பொருள் தடுப்பு மற்றும் பிரதேச மட்ட சிறுவர் மகளிர் அபிவிருத்திக் குழுக் கூட்டம் நிர்வாக உத்தியோகத்தர் திருமதி புனிதநாயகி தலைமையில் இடம் பெற்றன.

இதில் முதல் காலாண்டில் பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டம் தொடர்பாகத் துறை சார் உத்தியோகத்தர்கள் தெளிவு படுத்தினர். ஏனைய திணைக்களங் களால் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட விடயப்பரப்பு தொடர்பாக வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும் அரச, அரச சார்பற்ற பிரதிநிதிகளும் பங்குபற்றித் தாம் சார்ந்த வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடினர்.





# கல்வி அபிவிருத்திக் கலந்துரையாடல்

(எஸ். சினீஸ் கான்)

கத்தளாய் பள்ளிவாயல் சமாசத்தின் தலைவர் நஸார் மௌலவி தலைமையில் அனைத்து பாடசாலை அதிபர்களும் இணைந்து உதவிக் கல்விப் பணிப்பாளர் நப்ரி வழிகாட்டலில் இயங்கிவரும் குழுவினரை இன்று (27) கந்தளாய் ஆயிஸா பெண்கள் மகா வித்தியாலயத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் சந்தித்தார்.



இந்தச் சந்திப்பின் போது இந்தப் பிரதேச மாணவர்களின் எதிர்கால கல்வி நடவடிக்கைகள் சம்மந்தமாக கலந்துரையாடப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் இதன்போது தெரிவித்தார்.



# இராமகிருஷ்ண மிஷன் ஏற்பாட்டில் ஈரளகுளத்தில் அன்னதான மண்டபம்!

**(பழுவூரான்)**

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் ஏற்பாட்டில் வரலாற்றுப் பிர சித்தி பெற்ற ஈரளகுளம் வேலோடும் மலை ஸ்ரீமுருகன் ஆலயத்தில் அன்ன தான மண்டபம் ஒன்று திறந்து வைக் கப்பட்டது.

வேலோடுமலை முருகன் ஆலய தர்மகர்த்தா எஸ்.தியாகராஜா தலை மையில் நடைபெற்ற அன்னதான மண்டப திறப்பு விழாவில், இராம கிருஷ்ணமிஷன் மட்டக்களப்பு ஆச்சி ரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மக ராஜ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மண்டபத்தைத் திறந்து வைத் தார்.

லண்டனில் வாழும் திருமதி ஜீவா தேவி வரதராஜன், காலஞ்சென்ற மயில் வாகனன் வரதராஜன் ஏ.வி.எஸ். இன் ஞாபகார்த்தமாக இந்த அன்னதான மண்டபத்தை ராமகிருஷ்ண மிஷன் வேண்டுகோளின்படி நிறுவியுள்ளனர்.

இந்தப் பணியில் இராமகிருஷ்ண மிஷன் தொண்டர் கருணாநிதி பொறுப் பேற்று முருகன் ஆலயத்தின் தலை வர் தியாகராஜாவின் ஒத்துழைப்போடு பணிகள் நிறைவேற்றப்பட்டன.

அன்னதான மையத்தோடு இணைந்து சமய நூல்கள் மற்றும் இராமகிருஷ்ண மிஷனால் வெளி யிடப்பட்டுள்ள புத்தகங்களும் இதன் போது காட்சிக்காக வைக்கப்பட்டன.






# அம்பாறை மாவட்ட றக்பிப் போட்டியில் சம்பியனானது பாலமுனை ட்றைஸ்டார்





**(எம்.எம்.றம்ஸீன்)**

றக்பிப் போட்டியில் அம்பாறை மாவட்ட சம்பியனாக பாலமுனை ட்ரைஸ்டார் விளையாட்டு கழகம் தெரி வாகியுள்ளது.

அம்பாறை மாவட்ட பிரதேச கழகங் களுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகளில் ஒன்றான றக்பி போட்டி அண்மையில் தென்கிழக்கு பல்கலைக் கழகத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு பாலமுனை ட்றைஸ்டார் விளையாட்டுக்கழகம் மற்றுமொரு தடவை அம்பாறை மாவட்ட சம்பியனானது .

இந்நிகழ்வில் மாவட்ட விளை யாட்டுப் பணிப்பாளர் மானல் வீரசிங்க, விளையாட்டு உத்தியோகத்தர்களான ஏ.இம்றுபஸ்கான், எம்.எச்.அஸ்வத், ஸீ.எம்.றிஸ்லி,ஏ.றப்சான், ஏ.எம். நௌஸாத் ஆகியோர் அதிதிகளா கக் கலந்துகொண்டனர்.

இந்தப் போட்டியில் வெற்றிபெற்ற தன்மூலம் பாலமுனை ட்றைஸ்டார் விளையாட்டுக்கழகம், எதிர்வரும் 20ஆம் திகதி திருகோணமலையில் நடைபெறவுள்ள கிழக்கு மாகாண மட்டப் போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பையும் பெற்றுள்ளது.

இந்தக் கழகம் எட்டாவது தடவையாக கிழக்கு மாகாணப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ள அதேவேளை, 2022 ஆம் அண்டு கிழக்கு மாகாண சம் பியனாகவும் தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# ஆஸ்திரேலியா மாணவர் நிதியத்தின் ஆதரவில் மாணவர்களுக்கு உதவிகள்!

ஆஸ்திரேலியா இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் ஆதரவில், யாழ்., முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட மாணவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆஸ்திரேலியாவில் இருந்து கடந்த 36 வருடங்களுக்கும் மேலாக இயங்கி வரும் தன்னார்வத் தொண்டு நிறுவனமான இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் அனுசரணையில் அண்மையில் வடமாகாணத்தில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் வறுமைக் கோட்டின் கீழ் வதியும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவும் வகையில் 2024 ஆம் ஆண்டுக்கான முதல் மூன்று மாத கால நிதியுதவி வழங்கப்பட்டது.

இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் யாழ்., முல்லைத்தீவு, கிளிநொச்சி மாணவர் தொடர்பாடர் அமைப்பான சிறுவர் அபிவிருத்தி நிலைய பணியாளர்கள் இந்த நிகழ்ச்சியை ஒழுங்கமைத்திருந்தனர்.

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் திட்ட அமுலாக்கத்துடனும் ஆஸ்திரேலியா இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் நிதிப் பங்களிப்புடனும் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மாணவர்களின் கல்விக்கான முதலாம் காலாண்டுக் கொடுப்பனவு இந்த முறை ஒரு மாணவருக்கு மாதாந்தம் தலா நான்காயிரம் ரூபா வீதம் பன்னிரண்டாயிரம் ரூபா வழங்கப்பட்டது.

இலங்கையில் தோன்றியிருக்கும் பொருளாதார நெருக்கடியை கவனத்தில் கொண்டு, 2024 ஆம் ஆண்டு முதல் மாணவர்களுக்கான நிதிக் கொடுப்பனவு ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இந்த மாணவர்கள் மாதாந்தம் மூவாயிரம் ரூபாவை பெற்று வந்தனர்.

ஆஸ்திரேலியாவில் வதியும் தமிழ் அன்பர்களின் நிதிப்பங்களிப்புடன் மூன்று தசாப்த காலத்துக்கும் மேலாக இயங்கி வரும் இலங்கை மாணவர் கல்வி நிதியம், கடந்த 2008ஆம் ஆண்டு முதல் யாழ். சிறுவர் அபிவிருத்தி நிலையத்துடன் தொடர்பாடல்களை மேற்கொண்டு, போரிலும் வறுமையிலும் பாதிக்கப்பட்ட மாணவர்களை வடக்கில் தெரிவுசெய்து இந்த நிதிப்பங்களிப்பினை வழங்கி வருகிறது.

2024 ஆண்டில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கி பல மாணவர்கள் கல்விக்கான கொடுப்பனவு அந்தந்த பிரதேச செயலக பிரிவுகளில் வைத்து வழங்கப்பட்டுள்ளன.







# உலக நீர் தினத்தை முன்னிட்டு நீர் வழங்கல் சபையின் நிகழ்வு





(ஹஸ்பர்)

சர்வதேச நீர் தினமான மார்ச் 22 இனை முன்னிட்டு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கந்தளாய் அலுவலகம் ஏற்பாடு செய்த மரநடுகை மற்றும் புதிய பிரதான குழாய் நீர் பொறுத்தும் நிகழ்வு நேற்று (28) இடம்பெற்றன.

நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அதுகோரள பிரதம அதிதியாக கலந்து கொண்டு மரநடுகையை ஆரம்பித்து வைத்தார். பேரமடுவ பகுதியில் பிரதான நீர் குழாயும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இதில் பாடசாலை மாணவிகள் கலந்து கொண்டு மரநடுகையில் ஈடுபட்டனர். மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சி மற்றும் நீர் வழங்கல் சபையின் பிரதி பொது முகாமையாளர், திருகோணமலை பிராந்திய முகாமையாளர், சமூகவியலாளர், பொறியியலாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



# பெரிய வெள்ளி தினத்தில் கல்லடியில் சிலுவைப் பவனி!

(பழுவூரான்)

பெரிய வெள்ளி தினத்தை முன்னிட்டு, மட்டக்களப்பு நாவற்குடா சின்ன லூர்த்து மாதா தேவாலய போதகர் இக்னேசியஸின் ஆசீர்வாதத்துடனும், பங்கு மக்களின் பங்கேற்புடனும் இன்று வெள்ளிக்கிழமை (29) சிலுவைப் பவனி இடம்பெற்றது.

கல்லடி பழைய கல்முனை வீதியிலுள்ள விநாயகர் வித்தியாலய முன்றலில் இருந்து ஆரம்பமான ஊர்வலமானது பழைய கல்முனை வீதியூடாக தேவாலயத்தைச் சென்றடைந்தது.








# யுத்தம் காரணமாக மியன்மாரில் இருந்து இடம்பெயர்ந்து பாணந்துறையில் தங்கியுள்ள முஸ்லிம்களுக்கு உதவி






**(மன்னார்)**

யுத்தம் காரணமாக மியன்மாரில் இருந்து இடம் பெயர்ந்து இலங்கைக்கு கடல் மார்க்கமாக வருகை தந்து பாணந்துறையில் தங்கியுள்ள மியன்மார் முஸ்லிம் மக்களுக்கு அடிப்படை உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அவர்களுக்கு அவசர தேவையாக இருந்த வீட்டுக்கான நிவாரணத்தை மன்னார் மெசிடோ நிறுவனம் நேற்று வியாழக்கிழமை (28) நேரடியாக சென்று வழங்கியது.

மன்னார் மெசிடோ நிறுவனத்தின் இயக்குனர் ஜாட்சன் பிகிராடோ தலைமையிலான குழுவினர் நேரடியாக விஜயம் செய்து இதை வழங்கி வைத்துள்ளனர்.

யுத்தம் காரணமாக மியன்மாரில் இருந்து இடம் பெயர்ந்து பங்களாதேஷில் வாழ்ந்த நிலையில் அங்கிருந்து வெளியேறி தமது உயிரை பாதுகாத்துக் கொள்ள, கடல் மார்க்கமாக வருகை தந்துள்ள 105 பேர் கடந்த 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இலங்கையில் அகதிகளாக தஞ்சமடைந்தனர்.

யாழ்ப்பாணம் வலி வடக்கு பகுதியை வந்தடைந்த மியன்மார் அகதிகள் 105 பேரையும் மீட்ட கடற்படையினர் யாழ். மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய அவர்கள் கொழும்பு பாணந்துறையில் தங்க வைக்கப்பட்டனர்.

அவர்களுக்கு சர்வதேச அமைப்பால் கடந்த 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் 2023 டிசெம்பர் வரையான ஒரு வருட காலம் அவர்களுக்கான அடிப்படை உதவிகளையும் முன்னெடுத்து வந்தனர்.

இந்த நிலையில் கடந்த டிசெம்பர் மாதம் அவர்களின் உதவிகள் நிறுத்தப்பட்ட நிலையில் இவ்வருடம் 2024 முதல் அவர்கள் பாணந்துறை பகுதியில் வாடகைக்கு அமர்ந்திருந்த வீடுகளுக்கான மாத வாடகையை செலுத்த முடியாத நிலையில் காணப்பட்டனர்.

அவர்கள் இருந்த வீடுகளின் ஒப்பந்தம் முடிவடைந்தமையால் அந்த வீடுகளின் இருந்து வெளியேற வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது.

இதனால் எவ்வித அடிப்படை உதவிகளும் இன்றி மியன்மார் அகதிகள் 105 பேரும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர்.

2022 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வருகை தந்த போது அவர்களுக்கான உடனடி மனிதாபிமான பணிகளை மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் (மெசிடோ) உடனடியாக சுமார் 20 லட்சம் ரூபாய் பெறுமதியில் அவசர உதவிகளை வழங்கி இருந்தது.

அதன் தொடர்ச்சியாக அந்த மக்களின் வேண்டுகோளுக்கு அமைவாக பாணந்துறை பகுதியில் அவர்கள் தங்கியுள்ள வீடுகளின் உரிமையாளர்களுடன் கலந்துரையாடி அவர்கள் தொடர்ச்சியாக அந்த வீட்டில் தங்கி இருக்கும் வகையில் ஏற்பாடுகளை மேற்கொண்டனர்.

நேற்றைய தினம் வியாழக்கிழமை பாணந்துரை பகுதிக்குச் சென்ற மன்னார் மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையிலான குழுவினர் குறித்த வீடுகளுக்கான வாடகை பணத்தை கையளித்தனர்.

17 குடும்பங்களில் தயார் நிலையில் இருந்த 15 குடும்பங்களுக்கு 33 லட்சத்து 15500 ரூபா நிதியும் இரண்டு குடும்பங்கள் தமது ஆவணங்களை சரி செய்யாத நிலையில் அவர்கள் குறித்த ஆவணங்களை உடன் சமர்ப்பிக்கும் போது அவர்களுக்கு 4 லட்சத்து 56 ஆயிரம் ரூபாவும் மொத்தமாக 37 லட்சத்து 71 ஆயிரத்து 500 ரூபா நிதி மெசிடோ நிறுவனத்தால் அவர்களின் வீட்டு வாடகைக்காக பகிர்ந்தளிக்கப்பட்டது.




# விசேட தேவையுடைய மாணவரின் கலை, இலக்கிய ஊக்குவிப்பு நிகழ்வு!




(ஹஸ்பர்)

திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலகத்தின் ஏற்பாட்டில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கலை, இலக்கிய நிகழ்வுகளை ஊக்குவிக்கும் நிகழ்வு புதன்கிழமை (27) கோப் நிறுவனத்தால் நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வு திருகோணமலை நகர சபையின் செயலாளர் வெ. இராஜசேகர் தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வின் தொடக்கவுரையை நூலக உதவியாளர் அ.அச்சுதன் வழங்க, வரவேற்புரையை நூலகர் திருமதி. மு. லெ. நிம்சானா வழங்கினார்.

செயலாளரின் தலைமையுரையும் கோப் நிறுவனத்தின் பணிப்பாளரின் சிறப்புரையும் இடம்பெற்றன.

நிகழ்வில் நன்றியுரையை நூலக உதவியாளர் பா. விபூஷிதன் வழங்கினார்.

நிகழ்வில் நகர சபையின் நிர்வாக உத்தியோகத்தர் எச். எம். திலினி சந்தமாலி, பிரதம நூலகர் ந. யோகேஸ்வரன், நூலக உதவியாளர் உ . ரஜனிக்காந், கோப் நிறுவனத்தின் நிர்வாக உத்தியோகத்தர் கிருஸ்னி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மாற்றுத் திறனாளிகளின் தேசிய தடகளப் போட்டிகள்!

## நுவரெலியாவில் தகுதியானவர்கள் தெரிவு

மாற்றுத்திறனாளிகளுக்கான சமூக சேவைகள் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய தடகளப் போட்டியுடன் இணைந்து நுவரெலியா மாவட்ட சுற்றுப் போட்டி 28 அன்று நுவரெலியா மாநகர சபை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

நுவரெலியா மாவட்டத்தின் ஏழு பிரதேச செயலர் பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பல்வேறு பிரிவுகளில் போட்டியாளர்கள் கலந்து கொண்ட இந்தச் சுற்றுப் போட்டியில் 100, 200, 400 மீற்றர் தடை ஓட்டம், ஈட்டி எறிதல், நீளம் பாய்தல், தடம் பாய்தல் மற்றும் தடகளப் போட்டிகள் இடம் பெற்றன.

சமூக சேவைகள் திணைக்களத்தின் நுவரெலியா மாவட்ட அலுவலகம் மற்றும் பிரதேச செயலகத்தின் சமூக சேவைகள் பிரிவு இந்த போட்டியின் ஏற்பாட்டுக்குத் தலைமை தாங்கியதுடன், நுவரெலியா மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி பிரிவு மற்றும் விளையாட்டு அதிகாரிகள் நடுவர்களாகக் கடமையாற்றினர்.

நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தனகலபடவின் மேற்பார்வையின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் போட்டி வெற்றியாளர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் நுவரெலியா மேலதிக மாவட்ட செயலாளர் (காணி) தினிகா கவிசேகர ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த போட்டியில் சி.பி.ஆர். தன்னார்வலர்கள், சுயஉதவி நிறுவன அதிகாரிகள், மாற்றுத் திறனாளிகளின் பெற்றோர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# மற்றவர்களை மிரட்டுவது காங்கிரஸின் கலாச்சாரம்

## பிரதமர் மோடி விமர்சனம்



"மற்றவர்களை மிரட்டுவதுதான் காங்கிரஸ் கட்சியின் கலாச்சாரம். நாட்டில் உள்ள 140 கோடி மக்களும் காங்கிரஸ் கட்சியை நிராகரிப்பதில் ஆச்சர்யம் இல்லை."

– இவ்வாறு பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

ஊழல் வழக்குகளில் சிக்கியவர்கள் நீதித்துறைக்கு அழுத்தம் கொடுப்பதாக உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு 600 இற்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் கடிதம் அனுப்பியுள்ளனர்.

இதுகுறித்து, பிரதமர் மோடி தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"மற்றவர்களை அச்சுறுத்துவதுதான் காங்கிரஸ் கட்சியின் கலாச்சாரம். உறுதிப்பாட்டுடன் கூடியநீதித்துறை தேவை என காங்கிரஸ் கட்சியினர் 50 ஆண்டுகளுக்கு முன்பு கூறினர். ஆனால், அவர்கள் தற்போது வெட்கம் இன்றி தங்கள் சுயநலத்துக்காக மற்றவர்களிடமிருந்து அர்பணிப்பை எதிர்பார்க்கின்றனர்.

ஆனால் அவர்கள் நாட்டுக்கான கடமையிலிருந்து விலகியிருக்கின்றனர். அவர்களை 140 கோடி இந்தியர்களும் நிராகரிப்பதில் ஆச்சர்யம் இல்லை." – என்று குறிப்பிட்டுள்ளார்.

# நடிகை நவ்நீத் ராணா பா.ஜ.கவில் இணைந்தார்

## அமராவதி தொகுதி வேட்பாளராக அறிவிப்பு

மகாராஷ்டிரா மாநிலம் அமராவதி தனி தொகுதி சுயேச்சை எம்.பியும் நடிகையுமான நவ்நீத் ராணா தனது ஆதரவாளர்களுடன் நாக்பூரில் உள்ள சந்திரசேகர் பவன்குலே இல்லத்தில் பா.ஜ.கவில் இணைந்துள்ளார்.

இந்த நிலையில், அமராவதி தொகுதியில் பா.ஜ.க. வேட்பாளராக அவரது பெயரை பா.ஜ.கவின் மத்திய தேர்தல் கொமிட்டி நேற்று இரவு அறிவித்தது.

இதுகுறித்து, பா.ஜ.க. மாநிலத் தலைவர் சந்திரசேகர் பவன்குலே கூறுகையில்,

"ஹனுமன் சாலிசா கோஷம் எழுப்பி போராட்டம் செய்ததற்காக நவ்நீத் ராணா மீது வழக்கு தொடுத்து அவரை சிறையிலடைத்த முன்னாள் முதல்வர் உத்தவ் தாக்கரேவை



வன்மையாக கண்டிக்கிறேன். நவ்நீத் ராணாவுக்கு ஏப்ரல் 4 ஆம் திகதி வேட்புமனு தாக்கல் செய்யவிருக்கிறோம்." – என்றார்.

# ஜம்மு - காஷ்மீர் விபத்தில் 10 பேர் பலி; 300 அடி பள்ளத்தில் கவிழ்ந்த வாகனம்

ஜம்மு – காஷ்மீரில் கார் ஒன்று 300 அடி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

காஷ்மீரின் ஜம்மு – ஸ்ரீநகர் நெடுஞ்சாலையில் ராம்பன் அருகே பேட்டரி சாஸ்மா என்ற பகுதியில் பயணிகளை ஏற்றிக் கொண்டு வாடகை கார் ஒன்று சென்று கொண்டிருந்தது. நள்ளிரவு 1 மணி அளவில் மழை பெய்து கொண்டிருந்ததால் கட்டுப்பாட்டை இழந்த கார், 300 அடி பள்ளத்தில் கவிழ்ந்தது.

இந்த விபத்தில் காரில் பயணம் செய்த 10 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். அருகில் இருந்தவர்கள் கொடுத்த தகவலின் பேரில் பொலிஸ் மற்றும் மீட்புக் குழுவினர் சம்பவ இடத்துக்கு வந்து உயிரிழந்த 10 பேரின் உடல்களையும் மீட்டனர்.

இந்த விபத்துக்கு மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் எக்ஸ் பக்கத்தில் இரங்கல் தெரிவித்துள்ளார்.



இந்த மாத தொடக்கத்தில் இதே ராம்பன் பகுதியில் வாகனம் பள்ளத்தில் கவிழ்ந்த விபத்தில் நான்கு பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# வேறு கட்சிகளிலிருந்து பா.ஜ.கவில் 80 ஆயிரம் பேர் இணைந்தனர்

இந்தியாவில் ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் வேறு கட்சிகளில் இருந்து இதுவரை 80 ஆயிரம் பா.ஜ.கவில் இணைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தலுக்கு முன்னர் ஏனைய கட்சிகளில் இருந்து தலைவர்கள், தொண்டர்கள் என 1 லட்சம் பேரை கட்சியில் சேர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன் பா.ஜ.க செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் முன்னாள் மராட்டிய முதலமைச்சர் அசாக் சவான், முன்னாள் ஆந்திர பிரதேச முதலமைச்சர் கிரண் குமார் ரெட்டி ஆகியோர் பா.ஜ.கவில் இணைந்துள்ளனர்.அத்துடன் காங்கிரசை சேர்ந்த ரவ்நீத் சிங் பிட்டு, அகில இந்திய திரிணாமுல் காங்கிரசை சேர்ந்த அர்ஜுன் சிங், ஒய்.எஸ்.ஆர். காங்கிரசை சேர்ந்த வரபிரசாத ராவ் மற்றும் ஆம் ஆத்மியை சேர்ந்த சுஷில் குமார் ரிங்கு உள்ளிட் டோரும் பா.ஜ.கவில் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஹைதராபாத் காங்கிரஸின் வேட்பாளர் சானியா மிர்சா

தெலுங்கானா மாநிலத்தில் மக்களவைத் தேர்தல் களை கட்ட ஆரம்பித்துள்ளது. அங்கு எதிர்வரும் மே மாதம் 13 ஆம் திகதி 17 மக்களவைத் தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெற உள்ளது.

இந்த நிலையில், தற்போது தெலுங்கானாவில் புதிதாக ஆட்சியை பிடித்துள்ள காங்கிரஸ் கட்சி, மக்களவைத் தேர்தலிலும் தனது பலத்தை நிரூபிக்க முடிவு செய்துள்ளது.

ஹைதராபாத் மக்களவை தொகுதியில் தொடர்ந்து வெற்றி பெற்று எம்.பியாக உள்ளவர் ஏ.ஐ.எம்.ஐ.எம். கட்சி தலைவர் அசதுத்தீன் ஓவைஸி. இம்முறை பலமான அல்லது பிரபலமான ஒருவரை களம் இறக்க காங்கிரஸ் தீர்மானித்துள்ளது. அதன்படி, பிரபல டென்னிஸ் வீராங்கனையான சானியா மிர்சாவை களம் இறக்கலாம் என தீர்மானம் செய்யப்பட்டுள்ளது.



இது தொடர்பாக சானியா மிர்சா விடமும், அவரத் குடும்பத்தாரிடமும் காங்கிரஸார் பேசி ஒரு முடிவுக்கு வந்துள்ளனர். ஒருவேளை சானியா மிர்சா இல்லையெனில் அவரது தந்தையான இம்ரான் மிர்சாவை களம் இறக்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன் கிழமை டில்லியில், தெலுங்கானாவில் மீதமுள்ள தொகுதி வேட்பாளர்கள் தேர்வு குறித்து மத்திய காங்கிரஸ் தேர்தல் குழு தரப்பில் ஆலோசனை நடந்தது. இதில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.




# தென்னாபிரிக்காவில் இடம்பெற்ற விபத்தில் 45 பேர் உயிரிழப்பு

தென்னாபிரிக்காவில் கிறிஸ்தவ ஆராதனையில் பங்கேற்க சென்றவர்களை ஏற்றிச் சென்ற பஸ் விபத்துக்குள்ளானதில் 45 பேர் உயிரிழந்துள்ளனர்.

வடக்கு கிழக்கு லிம்போபோ பிராந்தியத்தில் மோரியா நகரில் நடைபெற்று வரும் தேவாலய ஆராதனையில் பங்கேற்பதற்காக சம்பந்தப்பட்ட குழுவினர் கபோரோனில் இருந்து பயணித்தனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேருந்தின் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் பாலத்தில் இருந்து 50 அடி பள்ளத்தில் உள்ள பாறையில் விழுந்து இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த விபத்தில் 8 வயது சிறுமி மட்டும் உயிர் தப்பியுள்ளார் எனவும் அவர் பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் தெரி விக்கப்பட்டுள்ளது.



# விமானம் விபத்தில் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார் ஸ்பெயின் பிரதமர்

ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ், தனது குடும்பத்துடன் பயணித்த விமானம் விபதுக்குள்ளாகியுள்ளது.

ஈஸ்டர் பண்டிகையை முன்னிட்டு, ஐரோப்பிய நாடான ஸ்பெயினில் தொடர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

விடுமுறையை தனது குடும்பத்தினருடன் கழிப்பதற்காக, பிரதமர் பெட்ரோ சான்செஸ், ஸ்பெயினின் தெற்கு பகுதியிலுள்ள டோனானா தேசிய பூங்காவுக்கு சுற்றுலா சென்றுள்ளார்.

அதன்படி, தலைநகர் மாட்ரிட்டில் இருந்து சிறிய ரக விமானம் மூலம் பயணித்த அவர்கள், புறப்பட்ட சிறிது நேரத்தில் அந்த விமானம், விமானியின் கட்டுப்பாட்டை இழந்துள்ளது.

இதனையடுத்து, அதிர்ச்சியடைந்த விமானி உடனடியாக கட்டுப்பாட்டு அறையுடன் தொடர்பு கொண்டதையடுத்து, அந்த விமானம் மீண்டும் மாட்ரிட் விமான நிலையத்திலேயே அவசரமாக தரையிறக்கப்பட்டது.

அங்கு தயாராக நின்று கொண்டிருந்த மீட்பு படையினர் பிரதமர் மற்றும் அவரது குடும்பத்தினரை பத்திரமாக




வெளியே அழைத்து வந்தனர்.

இந்த சம்பவத்தால் அங்கு பெரும் பரபரப்பு நிலவியது. எனினும் அதிர்ஷ்டவசமாக பிரதமர் தனது குடும்பத்தினருடன் உயிர் தப்பினார்.

சம்பவம் குறித்து, விசாரணைகளை ஆரம்பித்துள்ள விமான போக்குவரத்து துறை அதிகாரிகள், தொழில்நுட்ப கோளாறால் விமானத்தின் என்ஜின் செயலிழந்துள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது என்று தெரிவித்துள்ளனர்.





# காஸாவின் எல்லைகளை இஸ்ரேல் திறக்க வேண்டும்

## சர்வதேச நீதிமன்றம் உத்தரவு

காசாவிற்கு உதவிப் பொருள்கள் எந்தவிதமான தாமதம் இல்லாத வகையில் கிடைக்க மேலும் பல எல்லைகளை இஸ்ரேல் திறக்க வேண்டுமென சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இஸ்ரேல் இராணுவம் ஹமாஸ்க்கு எதிரான போர் என்ற பெயரில் காசா மீது தாக்குதல் நடத்தி இனப்படுகொலை செய்வதாக ஐ.நா.வின் சர்வதேச நீதிமன்றத்தில் தென்னாபிரிக்கா குற்றம் சாட்டியது.

ஆனால், இஸ்ரேல் இராணுவம் அதை மறுத்தது. எங்களது நோக்கம் ஹமாஸ்தான். எங்களை பாதுகாப்பதற்காகவே இராணுவ நடவடிக்கை எனத் தெரிவித்தது.

இந்த நிலையில், காசா மக்கள் உணவு பொருள்கள் கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். எல்லை வழியாக உணவு பொருட்கள் கொண்டு செல்ல முடியவில்லை என தென்னாபிரிக்கா மீண்டும் ஒரு குற்றச்சாட்டை முன் வைத்தது.

இந்த நிலையில் காசாவுக்கு உணவுகள், தண்ணீர், எரிபொருள் மருத்துவ பொருள்கள் உள்ளிட்ட மனிதாபிமான உதவிகள் தடையற்ற ஏற்பாடு அடிப்படையில் எந்தவிதமான தாமதம் இல்லாத வகையில் கிடைக்க இஸ்ரேல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இனப்படுகொலை ஒப்பந்தத்தின் கீழ் பாலஸ்தீன மக்கள் பாதிக்கும் வகையில் இஸ்ரேல் எந்தவிதமான இராணுவ நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உத்தரவை நடைமுறைப்படுத்துவது குறித்து ஒரு மாதத்திற்குள் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் நீதிமன்றம் கேட்டுக்கொண்டுள்ளது. கடந்த வருடம் ஒக்டோபர் 7 ஆம் திகதி திடீரென ஹமாஸ் இஸ்ரேல் நாட்டிற்குள் நுழைந்து கொடூர தாக்குதல் நடத்தினர். இதில் 1200 பேர் கொல்லப்பட்டனர்.

250 பேரை பணயக்கைதிகளாக பிடித்துச் சென்றனர். இதனால் ஹமாஸ் அமைப்புக்கு எதிராக போர் பிரகடனம் செய்த இஸ்ரேல், காசா மீது தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் 31 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# லெபனானில் இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் உயிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

லெபனானிலுள்ள மீட்புக் குழு அலுவலகத்தில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் உயிழந்தவர்களின் எண்ணிக்கை 16 ஆக அதிகரித்துள்ளது.

இது குறித்து அந்த நாட்டு அரச செய்தி நிறுவனமும், ஆயதக் குழுவினரும் நேற்று கூறுகையில்,

“ஹெபாரியே பகுதியில் இஸ்ரேல் நடத்திய விமானத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 16 ஆக அதிகரித்துள்ளது. அவர்களில் ஆயுதக் குழுவினர் மட்டுமின்றி ஏராளமான துணை வைத்தியக் குழுவினரும் அடங்குகின்றனர் “ - என்றனர்.

பக்கங்கள் 06


கனடா முரசு

வெள்ளிக்கிழமை 29/03/2024

## சமூக ஊடகத் தளங்களுக்கு எதிராக பாடசாலைகள் வழக்கு!

ஒன்ராரியோ,மார்ச்29

ஒன்ராறியோவின் நான்கு பிரதான பாடசாலைகள் பிரபல சமூக ஊடகத் தளங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளன. மாணவர்களின் கற்றலை C2



# வென்கூவர் கத்தோலிக்கச் சபை பூர்வீகக் குடிகளுடன் உடன்பாடு

## உயிர்த்த ஞாயிறு தினத்தில் புனித சாசனம் கைச்சாத்து

ஒன்ராரியோ,மார்ச்29

பிரிட்டிஷ் கொலம்பியா பூர்வீகக் குடிகளுடன் நல்லிணக்கத்தை நோக்கிய கடப்பாட்டை உயிர்த்த ஞாயிறு தினத்தில் வென்கூவர் கத்தோலிக்கச் சபை எடுக்கவுள்ளது.

தேவாலாயத்திற்கும், பூர்வீகக் குடிகளுக்கும் இடையில் புனித சாசனம் ஒன்று சாத்திடப்படவுள்ளதாக மார்ச் 28ஆம் திகதி தேவாலயத்தினால் அறிவிக்கப்பட்டது.

முன்னாள் வதிவிட பாடசாலையிலிருந்து சுமார் 200இற்கு மேற்பட்ட பூர் வீகக் குடியினரின் உடலங்கள் கண்ட றியப்பட்டு மூன்று வருடங்களில் பின்னர் இந்த அறிவிப்பு C2

# எதிர்க்கட்சித் தலைவர் பியர் பொலிவரின் அணுகுமுறை கனடிய முஸ்லிம்களுடனான உறவினைச் சிக்கலாக்கும்

## பிராந்திய முஸ்லிம் குழுவின் பேச்சாளர் எச்சரிக்கை



ஒன்ராரியோ,மார்ச்29

இஸ்ரேல் – ஹமாஸ் போர் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் பியர் பொலிவரின் நிலைப்பாடானது, முஸ்லிம் வேட்பாளர்களுடனான கனடிய முஸ்லிம்களின் உறவினைச் சிக்கலாக்கும் என பிராந்திய முஸ்லிம் குழுவின் பேச்சாளர் எச்சரித்துள்ளார்.

அரசியல் கட்சித் தலைவர்களுடனான சந்திப்பின் தொடர்ச்சியாக பியர் பொலிவரைச் சந்தித்த ஒன்ராரியோ – இலண்டன் ஹிக்மா பொது விவகாரங்கள் பேரவையினைச் சேர்ந்த நவாஸ் தாஹிர், முஸ்லிம்கள் மீது கருணையை வெளிப்படுத்துவதற்கான C2

# 2019 தேர்தல் வேட்புமனுப் பட்டியலில் வெளிநாட்டுத் தலையீடு இருந்ததாம்!

ஒன்ராரியோ,மார்ச்29

2019ஆண்டு தேர்தல் வேட்புமனுப் பட்டியலில் வெளிநாட்டுத் தலையீடு இருந்ததாக கனடிய உளவுப் பிரிவு தகவல் அறிவித்ததாக சிரேஷ்ட தேர்தல் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனினும், அந்தத் தருணத்தில் டொரன்டோவில் டொன் வெலி நோர்த் தேர்தல் தொகுதியில் தேர்தல் அதிகாரி எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என வெளிநாட்டுத் தலையீடுகள் தொடர்பில் மார்ச் 28ஆம் திகதி வெளியான விசா ரணை ஆணைக்குழுவின் ஆவணத் தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் செயற்பாட்டினைப் போலறன்றி, வேட்பாளர்கள் தெரிவு நடைமுறை வேறுபட்டது என தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

வேட்புமனுப் பட்டியல் தொடர்பில் ஏனையப் போட்டியாளர்களால் எந்தவொரு முறைப்பாடும் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் தேர்தல் அதிகாரி கூறியுள்ளார்.



# பூர்வீகப் பெண்கள் அமைப்பில் ஊழியர்களுக்கு வேலைநீக்கம்

## நிதிப் பற்றாக்குறை காரணமாம்

ஒன்ராரியோ, மார்ச் 29

கனடாவின் பூர்வீகப் பெண்கள் அமைப்பானது நிதிப்பற்றாக் குறையினால் ஊழியர்களை வேலை நீக்கம் செய்து வருகின்றது.

பூர்வீகக் குடியினப் பெண்கள், சிறுமியர்களின் நலனுக்காகவும், மாற்றுப்பாலினத்தினரின் நலன்களுக்காகவும் இந்த நிறுவனம் செயற்பட்டு வருகின்றது.

கடந்த வருடம் தமது செயற்பாடுகளுக்காக 48 மில்லியன் டொலர்கள் அரச நிதி கிடைத்ததாக குறித்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இவ்வருடம், ஊழியர்களுக்காக 3 மில்லியன்கள் மாத்திரமே கிடைத்திருப் பதாக குறித்த நிறுவனம் தெரிவித் துள்ளது. கடந்த வருடம் ஊழியர் களுக்காக 11 மில்லியன்கள் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.




இதன் காரணமாக, ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வந்த சுமார் 75 பேரை வேலை நீக்கம் செய்ய நேர்ந்துள்ளதாக அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.




### பிரபல சமூக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதித்து, மனநல பிரச்சினைகளுக்கு வழிகோலுவதாகவும் தெரிவித்து பேஸ்புக், இன்ஸ்டாகிராம், டிக்டொக் மற்றும் ஸ்னெப்செட் ஆகிய சமூக ஊடகத் தளங்களின் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சமூக ஊடக தளங்கள் கவனக்குறைவாக கட்டாயப் பயன்பாட்டிற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன என்றும், குழந்தைகள் சிந்திக்கும், நடந்துகொள்ளும் மற்றும் கற்கும் விதத்தை மாற்றியமைத்து, அதன் விளைவுகளைச் சமாளிக்க ஆசிரியர்களையும் பள்ளிக்கூடங்களையும் விட்டுவிடுவதாக இந்த குற்றச்சாட்டுகள் கூறுகின்றன.

சமூக ஊடகத் தயாரிப்புகளை அதிகளவில் மற்றும் கட்டாயமாகப் பயன்படுத்துவதால், மாணவர்கள் கவனம், கற்றல் மற்றும் மனநல நெருக்கடியை அனுபவித்து வருகின்றனர் என்று அவை தெரிவித்துள்ளன.

### எதிர்க்கட்சித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தர்ப்பத்தை பியர் தவறிவிட்டார் எனக் கூறியுள்ளார்.

இப்போது இந்த உறவை கட்டியெழுப்புவது சிரமமாக இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மிசிசாகாவின் பாகிஸ்தான் மற்றும் முஸ்லிம் சமுதாயங்களின் உறுப்பினர்களை கன்சர்வேட்டிவ் நாடாளுமன்ற உறுப்பினர் கார்னெட் ஜீனியஸ் சந்தித்த போது, காசாவில் போர்நிறுத்தத்திற்கு கோருவதற்கு பியர் பொலிவர் தவறி வருகின்றமை தொடர்பிலும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

காசாவின் மேற்குக்கரை விஜயம் செய்த லிபரல் மற்றும் புதிய ஜனநாயகக் கட்சி வேட்பாளர்களுடன் இணைந்து கொள்ள தவறியமை தொடர்பிலும் கன்சர்வேட்டிவ் கட்சியிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

### வென்கூவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியாகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த சாசனமானது தேவாலயத்திற்கும், பூர்வீகக் குடிகளுக்கும் இடையிலான உறவில் புதிய அத்தியாயத்தை கட்டியெழுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று சிறப்பு நேரத்தில் இந்த சாசனம் கையெழுத் திடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

## GUNAAM'S SUPER MARKET

# Super Deal of this Week

## till March 31st




LOWEST PRICE
8.99$
Only at GUNAAM'S SUPER MARKET

LOWEST PRICE
8.99$
Only at GUNAAM'S SUPER MARKET



LOWEST PRICE
9.99$
Only at GUNAAM'S SUPER MARKET




4 Niru Tin fish

## Gunaam's super market
## Good Fridayஐ முன்னிட்டு தரும் Super Deal

| | | | |
|---|---|---|---|
| Chocalate Swiss Roll | - $ 3.99 | கத்தரிக்காய் | - $1.49 lb |
| Maharaja Rice Flour | - $8.99 | Drumstick | - $4.99 lb |
| Maharaja Basmati Rice | - $13.99 | Small onion | - $5.99 lb |
| BaBa Uppuma | - $2.99 | Rasavalli | - &5.99 lb |
| Nestum Serial | - $5.99 | US CRAB Box | - $18.99 |
| MR Goudas Coconut Powder 3 For | - $10.00 | இறால் | - $3.99 lb |
| NIRU Tin Fish 4 For | - &10.00 | சுறா | - $5.99 lb |
| AROY - D Coconut Milk Tin 4 For | - $10.00 | திரளி | - $5.99 lb |
| NIRU 8 lb Mysoor Dool | - $7.99 | ஊர் ஆட்டிறைச்சி | - $7.99 lb |
| NIRU 10 lb Proboiled Rice | - $8.99 | ஊர் கோழி | - $7.99 |
| NIRU அவித்த மா | - $8.99 | காட்டுப் பன்றி | - $5.99 lb |
| | | முழு King Fish | - $6.99 lb |

1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998

# ஒரே குடும்பத்தில் மூன்று பேரை கொலை செய்தபின் தற்கொலை

## சசகெச்சுவானின் நியூடொரப் பகுதியில் சம்பவம்

சசகெச்சுவான், மார்ச் 29

சசகெச்சுவானின், நியூடொரப் பகுதியில் நபர் ஒருவர் குடும்பத்தில் உள்ள மூவரை கொலை செய்துவிட்டு தாம்தற்கொலைசெய்துகொண்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

67 வயதான ஆண் ஒருவர், 58 வயதான பெண் ஒருவர் மற்றும் 30 வயதான அவர்களின் மகன் ஆகியோர் இந்த சம்பவத்தில் கொலை செய்யப் பட்டுள்ளனர் என மார்ச் 28ஆம் திகதி பொலிஸார் வெளியிட்டுள்ள அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீட்டில் உயிரிழந்த நிலையில் அடை யாளங் காணப்பட்ட நான்காவது நபர் 34 வயதானவர் எனத் தெரிவிக்கப்ப டுகின்றது எனினும், உயிரிழந்தவர் களின் பெயர்களை பொலிஸார் வெளி யிடவில்லை.





# முறையான பயிற்சி, கருவிகள் இல்லாமையே 2 மீட்புப் பணியாளர் உயிரிழக்கக் காரணமாம்

கியூபெக்,மார்ச்29

கடந்த மே மாதம் கியூபெக் நகரின் வடகிழக்கில் வெள்ளத்தில் சிக்கிய இருவரை மீட்கும் முயற்சியில் உயிரி ழந்த இரண்டு தன்னார்வ தீயணைப்பு வீரர்களுக்கு முறையான பயிற்சி மற்றும் உபகரணங்கள் இல்லை என்று கியூபெக்கின் பணியிடப் பாதுகாப்புச் சபை கண்டறிந்துள்ளது.

மே 1 மீட்பு முயற்சி சரியாக திட்டமிடப் படவில்லை மற்றும் தீயணைப்பு வீரர்கள் பயன்படுத்திய வாகனம் நடவடிக்கைக்கு பொருத்தமற்றது என்று பணியிட பாதுகாப்புச் சபை மார்ச் 28ஆம் திகதி வெளியிட்ட அறிக்கையில் தெரிவித் துள்ளது.

'தண்ணீருக்கு அருகாமையில் அல்லது தண்ணீருக்கு அருகில் வேலை செய்வதற்கான பயிற்சி இல்லாததால், தீயணைப்பு வீரர்களுக்கு தேவையான திறன்கள், அறிவு மற்றும் அனுபவம் இல்லாதமை நீரில் மூழ்கும் அபாயத்தை வெளிப்படுத்தியது' என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.





# கனடிய தமிழர் பேரவை முன்னெடுத்த மகளிர் தினக் கொண்டாட்ட நிகழ்வு

கனடிய தமிழர் பேரவையின் மகளிர் தின கொண்டாட்டங்கள் மார்ச் 24, 2024 அன்று இடம்பெற்றன. இந்நிகழ்வு கனடாவில் உள்ள தமிழ் சமூகத்திற்குள்ளும் அதற்கு அப்பாலும் பெண்களின் குறிப்பிடத்தக்க சாதனைகள் மற்றும் பங்களிப்புகளைக் கொண்டாடும் வகையில் அமைந்திருந்தது.

பாரம்பரிய மங்கள விளக்கு ஏற்றுதல் கலாச்சார முக்கியத்துவத்துடன் ஆரம்பமான நிகழ்வு கனேடிய தேசிய கீதம் மற்றும் தமிழ் தாய் வாழ்த்து பாடுவதன் மூலம்நமது இரட்டைபாரம்பரியத்தையும் கலாச்சாரங்களின் இணக்கமான கலவையையும் பிரதிபலித்துத்தொடர்ந்தது.

அதிகாரமளித்தல் மற்றும் கொண்டாட்டத்தின் கருப்பொருளை எதிரொலிக்கும் வகையில், தமிழ் சமூகத்தில் உள்ள பலதரப்பட்ட திறமைகளை வெளிப்படுத்தும் கலாச்சார நடனநிகழ்ச்சிகளும் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தன.

கனடிய தமிழர் பேரவையின் தலைவர் ரவீனா ராஜசிங்கம், தனது உரையில் பாலின சமத்துவத்தை முன்னேற்றுவதற்கும் பல்வேறு துறைகளில் பெண்களின் தலைமையை ஆதரிப்பதற்கும் அமைப்பின் உறுதிப்பாட்டை வலியுறுத்தினார்.

வசந்தி அழகுசாதனப் பொருள்களின் நிறுவனர் பிங்கி கோசல் மற்றும் நோய்வாய்ப்பட்ட குழந்தைகளுக்கான





மருத்துவமனையின் மருத்துவப் பயன்பாடுகளின் இயக்குநர் நிண்டு குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டமையோடு அவர்களின் வெற்றிக்கான பாதையைப்பற்றியும் வந்திருந்தவர்களிடம் பகிர்ந்து கொண்டனர்.

கோரி பிரையன், ஏீ கார்ப்பரேட் சர்வீசஸ் மற்றும் ஸ்காபரோ ஹெல்த் நெட்வொர்க்கின் ஊகுழ ஸ்காபரோ ஹெல்த் நெட்வொர்க்கைப் பிரதிநிதித்துவப்படுத்தி வலுவான சமுதாயத்தை உருவாக்குவதில் சமூக ஆரோக்கியம் மற்றும் அதிகாரமளிப்பு ஆகியவற்றின் முக்கிய பங்கை அடிக்கோடிட்டுக் காட்டும்வகையில் ஒரு சிறப்புரையை வழங்கினார்.

'மேட் இன் முல்லைத்தீவு' முயற்சியானது அதன் இரண்டாம் கட்டத்திற்கு நகர்வது தொடர்பான அறிவிப்பானது நிகழ்வின் குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும். முல்லைத்தீவில் ஒரு காட்சியறை திறக்கப்படவுள்ள முயட்சிகள் தொடர்பில் பங்கேற்பாளர்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டது. மேட் இன் முல்லைத்தீவு காட்சியறையானது பொருளாதார வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கான ஒரு படி மட்டுமல்ல் பெண்கள் நிதி சுதந்திரத்தையும் வலிமையையும் அடையக்கூடிய சமூக சூழலை வளர்ப்பதாகவும் அமையும்.

இந்த காட்சியறை எதிர்வரும் மாதங்களில் ஸ்தாபிக்கப்படவுள்ளதுடன், முல்லைத்தீவு நகரின் மையப்பகுதியில் அதன் புதிய பஸ் நிலைய வளாகத்தில் அமையவுள்ளது. அதிக எண்ணிக்கையிலான உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு C6

# கனடிய தமிழர் பேரவை முன்னெடுத்த மகளிர் தினக் கொண்டாட்ட நிகழ்வு



(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆதர வளிக்கும் இந்த காட்சியறைக்கு நிதி யளிக்க ஊவுஊ உறுதியளித்துள்ளது. கனடிய தமிழர் பேரவையின் இந்த முக்கிய முயற்சிக்கு ஆதரவளிக்கும் முகமாகவும், போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் தொழில் முயற்சிகளை ஊக்கப்படுத்தும் நோக்குடனும் இந்த நிகழ்வில் கலந்து கொண்ட பலர் புடவைகளை வாங்குவதன் மூலம் ஆதரவளித்திருந்தனர்.

2024 கனடிய தமிழர் பேரவை மகளிர் தலைமைத்துவ விருது கடந்த 40 ஆண்டுகளாக சிறந்த பங்களிப்பு மற்றும் தலைமைத்துவத்துடன் செயற்பட்ட மணிபத்மராஜாவை பாராட்டி வழங்கப்பட்டது. தமிழ் அகதிகளின் வீட்டுத் தேவைகளுக்கு உதவுவதற்காக செனோர் தமிழ் மையத்தை உருவாக்குவதற்கும், தமிழ் கூட்டுறவு கட்டடத்தை நிறுவுவதற்கும் மணி பத்மராஜா குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளார். மாற்றத்தையும் முன்னேற்றத்தையும் ஊக்குவிக்கும் பெண் தலைவர்களை அங்கீகரித்து கொண்டாடும் சக்திக்கு இந்த தருணம் சான்றாக இருந்தது. இந்த விருதை குமுதினி தவராஜ் அறிமுகப்படுத்தி, டாக்டர் மீரா செல்வகோன் வழங்கினார்.

இந்நிகழ்வில், மருத்துவர் மீரா செல்வகோன் அவர்களால் நடத்தப்பட்ட மருத்துவக் குழு கலந்துரையாடலில், டாக்டர் காயத்திரி நாகநாதன், டாக்டர் நிஷானி உமாசுதன் மற்றும் சமூக சேவகர் ஃபாடியா ஷைதீன் ஆகியோருடன் பல்வேறு உடல்நலம் மற்றும் சமூகப் பிரச்சினைகளை ஆராய்ந்து, நுண்ணறிவுமிக்க முன்னோக்குகளையும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு தொடர்புகளை வளர்த்துக்கொள்வதற்கான வாய்ப்பையும் வழங்கி இருந்தது குறிப்பிடத்தக்கது.




இந்த நிகழ்வின்போது காலஞ்சென்ற திருமதி சத்தியஜோதி செல்வகோனின் வாழ்நாள் முழுவதும் தமிழ் சமூகத்திற்கு அவர் ஆற்றிய பங்களிப்புக்காக அஞ்சலி செலுத்தப்பட்டது.

பாலின சமத்துவத்திற்காக வாதிடுவதற்கும், பெண்களின் தலைமையை ஆதரிப்பதற்கும், ஒவ்வொரு பெண்ணின் பங்களிப்பும் மதிக்கப்படும் மற்றும் கொண்டாடப்படும் சமூகத்தை வளர்ப்பதற்கும் கனடிய தமிழர் பேரவை அர்ப்பணிப்புடன் செயற்படும் என்பதற்கு இந்த நிகழ்வும் ஒரு சான்றாக அமைந்திருந்தது.

# ஈத் அல்-பித்ருக்கான வாழ்த்துக்களை அனுப்ப மத்திய கிழக்கு இனிப்புகள் அடங்கிய முத்திரை

## கனடா போஸ்ட் வெளியிடுகின்றது

ஒன்ராரியோ,மார்ச் 29

இஸ்லாமியர்களின் புனித மாதத்தின் முடிவைக் குறிக்கும் வருடாந்த பண்டிகையை நினைவுகூரும் வகையில், கனடா போஸ்ட் மத்திய கிழக்கு இனிப்புகள் அடங்கிய முத்திரையை வெளியிட்டுள்ளது.

ரம்ழானைத் தொடர்ந்து வரும் ஏப்ரலில் இஸ்லாமியப் பண்டிகையான ஈத் அல்-பித்ருக்கு முன்னதாக வாழ்த்துக்களை அனுப்ப கனேடியர்கள் தபால் தலைகளைப் பயன்படுத்தலாம் என்று கிரவுன் கார்ப்பரேஷன் தெரிவித்துள்ளது.

இது புனித மாதமான ரமழானைத் தொடர்ந்து பல முஸ்லிம்கள் சூரிய உதயம் முதல் சூரிய அஸ்தமனம் வரை நோன்பு மற்றும் தொண்டு நிறுவனங்களுக்குத் தொண்டாற்றுகிறார்கள்.

முத்திரைகளில் மாமூல் எனப்படும் இனிப்பு வகைகள் இடம்பெற்றுள்ளன, அவை உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்களால் கொண்டாட்டத்தின் போது சுடப்பட்டு நுகரப்படுகின்றன, மேலும் அவை பண்டைய எகிப்தில் உள்ளன.

